IN THE COURT OF THE DISTRICT MUNSIF, TIRUMANGALAM

**DEPOSITION OF WITNESS (P.W.1 )**

Solemnly affirmed and sworn by Tmt.D.Gnanadeepam Grade III Bench clerk on 03.01.2025. in accordance with the provisions of Act XX111.

அசல் வழக்கு எண்– 49/2009

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகன் | தாலுகா | |
| தகப்பனார்/கணவர் பெயர் | | ஊர் | |
| தொழில் | | மதம் | |
| வயது | | | |

வா.சா. 1 முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் 5ம் வாதி மற்றும் வாதி தரப்பு 1 வது சாட்சியாவேன். நான் எனது முதல் விசாரணையை எழுத்து மூல நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். அவை அனைத்தும் உண்மையே.

எனது தகப்பனாரான 1ம் வாதி பெயரில் உள்ள கிரைய ஆவணத்தை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**27.07.1988ம் தேதியிட்ட கிரைய ஆவணம் வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

எனது அம்மா பெயரில் உள்ள கிரைய ஆவணத்தை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**01.02.1986ம் தேதியிட்ட கிரைய ஆவணம் வா.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

எனது தகப்பனார் மற்றும் தாயார் பெயரில் உள்ள சொத்து வரி ரசீதுகளை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**09.03.2007ம் தேதியிட்ட சொத்து வரி ரசீதுகள் (2 எண்ணம்) வா.சா.ஆ. 3 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது.**)

தாவா சொத்தை காட்டகூடிய மாதிரி வரைபடத்தை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**மாதிரி வரைபடம் வா.சா.ஆ. 4 ஆக**

**குறியீடு செய்யப்படுகிறது.**)

நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**நீதிமன்ற ஆணையரின் அறிக்கை நீ.ம.சா.ஆ. 1 ஆகவும், ஆணையரின் வரைபடம் நீ.ம.சா.ஆ. 2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**)

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி வா.சா.1 குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)